## 22. முற்புறத்தில் என்னை நெருக்குகிறீா

### பல்லவி

முற்புறத்தில் என்னை நெருக்குகிறீர்
பின்புறத்தில் என்னை நெருக்குகிறீர்
உமது கரத்தை என் மேல் வைத்து
அனுதினம் நடத்துகிறீர்

### அனுபல்லவி

*ஆச்சரியம் இது என்ன ஆச்சரியம்*
*மனித புத்திக்கு எட்டாதது*

### சரணங்கள்

1. கர்த்தாவே நீரே என்னை
ஆராய்ந்து அறிந்துள்ளீர்
நடந்தாலும் நான் படுத்தாலும்
என்னை சூழ்ந்துள்ளீர்
- ஆச்சரியம் இது

2. என் நாவில் சொல் பிறவாமுன்னே
கர்த்தாவே அறிந்துள்ளீர்
என் நினைவுகளை தூரத்திலிருந்து
ஆராய்ந்து அறிகின்றீர்
- ஆச்சரியம் இது

3. உம்முடைய ஆவிக்கு
மறைவாய் எங்கே போவேன்
உம்முடைய சமுகத்தை விட்டு
எங்கே ஓடிடுவேன்
- ஆச்சரியம் இது